வழங்கப்பட்ட வீட்டு மனைகள் கூட சர்வே செய்து கொடுக்கப் படாமல் ஆண்டுக்கணக்கில் தாமதமாகி வருகிறது. அது மட்டுமல்ல, இரண்டு மூன்று வட்டங்களுக்குச் சேர்ந்து ஒரு அரிசன நல வட்டாட்சியர் இருக்கிறார். அவருக்கு ஜீப் வசதி கூட கிடையாது. அந்த வசதி இல்லாததால் வேலைகள் மிகமிகத் தாமதமாகிறது. மத்திய அரசு வீட்டுமனைகள் கொடுக்கும் நிதி கூட சரிவர பயன் படுத்தப்படமுடியாமல் இருக்கிறது. ஆகவே, வட்டத்துற்கு ஒரு அரிசன நல வட்டாட்சியர், போதுமான சர்வேயர்களை நியமித்து, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, அந்த வேலை களைச் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 29 உதவியாளர் பதவிகளும், 8 இளநிலை உதவியாளர் பதவிகளும் 29 ஆய்வாளர் பதவிகளும், 31 எங்கிலியர் பதவிகளும் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான நாற்காலி மேஜை போன்ற மரச் சாமான்கள் வாங்குவதற்கும், அந்த 29 தனி வட்டாச்சியர் அலுவலகங்கள் வாடகைக்கட்டிடங்களில் அமைக்க மற்றும் மின்சாரம் போன்ற சில வசதிகளும் சேர்த்து மொத்தமாக ஒரு மதிப்பீட்டை ஆதிதிராவிட இயக்குனர் அரசுக்குச் சமர்ப்பித்து உள்ளார். அந்த மதிப்பீட்டுத்தொகை ரூ.10 லட்சத்திற்கு இருக்கிற காரணத்தால், அதை அரசு பரிசீலித்து, அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. வட்டத்திற்கு ஒரு தனி வட்டாட்சியர் என்ற முறை இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே. 10 ஆண்டு காலமாக வீட்டு மனை கொடுத்தும், அந்த இடங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால், யார் யாருக்கு எந்தெந்த இடம் என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு அந்த நிலத்தை சர்வே செய்து அந்தந்த இடங்களை அவர்களுக்குக் கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

பேரையூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 946 திரு கே. தனக்கோடித்தேவர்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் அரிசன நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:

அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் ஆதிதிராவிடர் நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட நல அலுவலரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு பி. மெக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமனாதபுரம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். அங்கே ஏழை எளிய மக்கள் காலம்காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கும் மக்களுக்கு அந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பேரையூரில் புதிதாக இந்த ஆண்டிலேயே ஒரு விடுதி துவக்கி அந்த அரிசன மாணவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன் வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு துவக்குவதற்கு இயலாது. மாவட்ட ஆதித்திராவிடர் நல அலுவலரிடமிருந்து அறிக்கை பெற்றபின்தான் அந்த வேலை துவங்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் இணைப்பை பார்க்க]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

அ. கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற

மோகன் பேகன் அணிக்குப் பாராட்டு

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, அகில இந்திய கால்பந்தாட்டப் போட்டி, ஒரு மாதகாலமாக சென்னையில் நடந்து நேற்றையதினம் முடிந்து, மோகன் பேகன் அணி வெற்றி பெற்று இருக்கிறது அதற்கு தமிழக மக்களின் பல்லாயிரக் கணக்கானவர்களின் வாழ்த்துக்களோடு அந்த அணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெடரேஷன் கப் பரிசு வழங்கி இருக்கிறார்கள் அந்த அணி போட்ட இரண்டு கோல்களில் ஒரு கோலை அந்த அணியைச் சேர்ந்த உலகநாதன் போட்டு